**தேசிய செய்திகள்**

**இந்தியா மற்றும் மாலத்தீவு இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி தொடக்கம்.**

- இந்திய ராணுவம் மற்றும் மாலத்தீவு தேசிய பாதுகாப்புப் படைகளுக்கு இடையேயான "எக்ஸ் எகுவெரின்" என்ற கூட்டு ராணுவப் பயிற்சியின் 12வது பதிப்பானது ஜூன்11, 2023 அன்று தொடங்கியுள்ளது.
- இந்த கூட்டு ராணுவப் பயிற்சியானது ஜூன் 11 முதல் 24 வரை உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள சௌபதியாவில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈகுவெரின் என்பது "நண்பர்கள்" எனப்பொருள்படும் நம்பகத்தன்மையான வார்த்தையை முதன்மையாக கொண்டு இந்த பயிற்சியானது இந்தியாவிலும் மாலத்தீவிலும் மாறி மாறி நடத்தப்படும் இருதரப்பு வருடாந்திர பயிற்சி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**முன்னாள் ராணுவத்தினருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க மத்திய அரசு திட்டம்.**

- பாதுகாப்பு அமைச்சகத்தின் (MoD) முன்னாள் படைவீரர் நலத் துறையின் கீழ் பிரிவான இயக்குனரக பொது மீள்குடியேற்ற அமைப்பானது (DGR), கொடாக் மஹிந்திரா இன்சூரன்ஸ்(KMI ltd) என்ற தனியார் நிறுவனத்துடன் ஜூன் 12 அன்று புதுதில்லியில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டது.
- முன்னனி பெரிய மற்றும் நடுத்தர கார்ப்பரேட் நிறுவனங்களையும், முன்னாள் ராணுவ வீரர்களையும் ஒரு பொதுவான தளத்தில் கொண்டு வருவதன் மூலம் அவர்களுக்கு அதிக மற்றும் திருப்திகரமான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாக கொண்டு இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இந்தியாவின் தொழில்துறை உற்பத்தியானது 4.2% ஆக இந்த ஆண்டில் உயர்வு.**

- இந்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் நமது நாட்டின் தொழில்துறை உற்பத்தியானது வளர்ச்சியடைந்து 4.2 சதவீதமாக உயர்ந்துள்ளது என்று மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகமானது ஜூன் 12 அன்று வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- இந்த உற்பத்தி வளர்ச்சியானது தொடர்ந்து வளர்ந்தால் நாட்டின் இந்த ஆண்டிற்குள் GDPயானது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டதை விட உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கிடையே சுரங்க உற்பத்தியும் 5.1 சதவிகிதம் உயர்ந்துள்ளதால், இந்தியாவின் தொழில்துறை உற்பத்தியின் குறியீடு (IIP) விரிவடைந்துள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இந்தியாவின் G20 தலைமையின் கீழ் 4வது மற்றும் இறுதி மாநாட்டை கல்வி அமைச்சகம் நடத்த திட்டமிட்டுள்ளது.**

- மத்திய கல்வி அமைச்சகமானது மகாராஷ்டிராவின் புனேவில் ஜூன் 19 முதல் 21 வரை இந்தியாவின் G20 தலைமையின் கீழ் 4வது மற்றும் இறுதி கல்வி பணிக்குழு (EdWG) மாநாடை நடத்த திட்டமிட்டுள்ளது.
- "கலப்பு கற்றலின் சூழலில் அடிப்படையின் எழுத்தறிவு மற்றும் எண்ணற்ற தன்மையை உறுதி செய்தல்" என்பதை தலைப்பாக கொண்டு இந்த மாநாடானது நடக்க உள்ளது. இந்த மாநாடானது சில குறிப்பிடத்தகக்க வளர்ச்சியை கல்வி துறையில் ஏற்படுத்தும் என்று எதிப்பார்க்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**உள்நாட்டிலேயே முதன்முதலில் உருவாக்கப்பட்ட விலங்குகளிலிருந்து பெறப்பட்ட திசு - இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு ஒப்புதல்.**

- பாலூட்டிகளின் உறுப்புகளிருந்து, உள்நாட்டிலேயே குறைந்த செலவில் உருவாக்கப்பட்ட திசு பொறியியல் மருந்துக்கு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டாளர் அமைப்பானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மருந்தானது சிறிய தழும்புகளுடன் உள்ள தோல் காயங்களை விரைவாக குணப்படுத்தும் என்றும் விலங்குகளிலிருந்து பெறப்பட்ட இது "வகுப்பு D" தரத்திலான உயிரியல் தொழில்நுட்ப மருந்து பிரிவில் வைக்கப்பட்டுள்ளது எனவும் இந்திய மருந்துக் கட்டுப்பாட்டாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

**சர்வதேச செய்திகள்**

**வங்கதேசத்திற்கு 400 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கடன் வழங்க ADB ஒப்புதல் அளித்துள்ளது.**

- ஆசிய வளர்ச்சி வங்கியானது(ADB) வங்கதேசத்தின் பல்வேறு துறையை மேம்படுத்துவதற்கான 400 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கடன் வழங்கும் திட்டத்திற்கு ஜூன் 13 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ஆசிய வளர்ச்சி வங்கியானது(ADB) ஜூன் 13 அன்று வங்கதேசத்திற்கு உள்நாட்டு வளங்களை மேம்படுத்துவதற்காகவும், சிறு குறு மற்றும் நடுத்தர வணிகங்கள், குறிப்பாக பெண்கள் தலைமையிலான வணிகங்கள் குறைந்த செலவில் அதிக லாபத்தை ஈட்ட வைப்பதற்கான செலவு திட்டங்களை மேற்கொள்ளுதல், பொதுச் செலவினங்களின் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக 400 மில்லியன் அமெரிக்க டாலர் கடனை வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

**மாநில செய்திகள்**

**உத்திர பிரதேசத்தில் ரூ.8415 கோடி மதிப்பிலான 10 தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.**

- உத்தரப் பிரதேச மாநிலத்தில் 8415 கோடி ரூபாய் மதிப்பிலான "10 தேசிய நெடுஞ்சாலைகளுக்கான திட்டங்களுக்கு மத்திய சாலைப் போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி ஜூன் 12 அன்று அடிக்கல் நாட்டியுள்ளார்.
- 2,200 கோடி மதிப்பிலான ஐந்து தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களானது பிரதாப்கர் சுற்றியுள்ள பகுதிகளிலும், 6,215 கோடி மதிப்பிலான ஐந்து நெடுஞ்சாலைத் திட்டங்களானது மாநிலத்தின் தியோரியா சுற்றியுள்ள பகுதிகளிலும்

Examsdaily

செயல்படுத்தப்படும் என மத்திய அமைச்சர் கட்கரி தெரிவித்துள்ளார். இந்த திட்டத்தின் மூலம் நாட்டின் விரைவான மற்றும் மேம்பட்ட போக்குவரத்தினை மக்களுக்கு வழங்குவதை நோக்கமாக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஹரியானாவில் பத்மஶ்ரீ, பத்ம பூஷண் மற்றும் பத்ம விபூஷன் விருது பெற்றவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்க திட்டம்.**

- பத்மஶ்ரீ, பத்ம விபூஷண் மற்றும் பத்ம பூஷன் விருதுகளைப் பெறுபவர்களுக்கு "மாதாந்திர ஓய்வூதியம்" ஆக ரூ.10,000 ஆனது, அவர்களின் சிந்தனையை மதிப்பளிப்பதற்காகவும் அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகவும் வழங்கப்படும் என ஹரியானா முதல்வர் மனோகர் லால் அறிவித்துள்ளார்.
- அதுமட்டுமின்றி, மாநில அரசின் உயர்தர வால்வோ பேருந்துகளில் அவர்களுக்கு இலவச பயண வசதி அளிக்கும் திட்டத்தையும் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

## நியமனங்கள்

**புதிய BSF தலைமை இயக்குனராக உயர் போலீஸ் அதிகாரியான "நிதின் அகர்வால்" நியமிக்கப்பட்டுள்ளார்.**

- 1989 தொகுதி மற்றும் கேரள பணியகத்தை(CADRE) சேர்ந்த  ஐபிஎஸ் அதிகாரியான நிதின் அகர்வால், எல்லைப் பாதுகாப்புப் படையின் (BSF) புதிய நிர்வாக இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஜூன் 14லிருந்து அந்த பதவியை மேற்கொள்ளுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தற்போது டெல்லியில் உள்ள மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் (CRPF) தலைமையகத்தில் கூடுதல் தலைமை இயக்குநராக பணிபுரியும் நிதின் அகர்வால், இந்த நியமனத்தில் மூலம் அந்த அமைப்பில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து மேம்படுத்துவார் என BSF தெரிவித்துள்ளது.

**WFI தேர்தலின் தேர்தல் அதிகாரியாக ஜம்மு&காஷ்மீர் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி நியமனம்.**

- இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவருக்கான(WFI) தேர்தலை ஜூலை 4 ஆம் தேதி நடைபெறும் என இந்திய ஒலிம்பிக் சங்கமானது(IOA) ஜூன் 12 அன்று அறிவித்துள்ளது.
- இந்த தேர்தலானது சரியான முறையில் நடத்துவதற்காக ஜம்மு&காஷ்மீர் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி "மகேஷ் மிட்டல் குமாரை" தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

**PF ஆணையராக பங்கஜ் ஜூன் 12 அன்று பொறுப்பேற்பு.**

- சென்னை மற்றும் புதுச்சேரி மண்டலத்தின் கூடுதல் மத்திய வருங்கால வைப்பு நிதி(PF) ஆணையராக பங்கஜ் ஜூன் 12 அன்று பொறுப்பேற்றுளார்.
- இதற்கு முன், அவர் புது தில்லியில் உள்ள ஊழியர் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் பல்வேறு பதவிகளிலும் பல்வேறு துறைகளிலும் மேம்பாடுகளை மேற்கொண்டுள்ளார் என PF அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த நியமனம் மூலம் அவரின் சிறப்பான மேம்பாடுகளை வெளிப்படுத்துவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார செய்திகள்

**PNB ஆனது IVR-அடிப்படையிலான “UPI 123PAY”-ஐ அறிமுகப்படுத்திய முதல் பொதுத்துறை வங்கியாகும்.**

- பஞ்சாப் நேஷனல் வங்கியானது(PNB) IVR-அடிப்படையிலான UPI தீர்வு - **UPI 123PAY**-ஐ ஜூன் 12 இல் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதை அறிமுகப்படுத்திய முதல் பொதுத்துறை வங்கி என்ற அந்தஸ்தை பஞ்சாப் நேஷனல் வங்கி பெற்றுள்ளது மற்றும் இது 2025ஆம் ஆண்டுக்குள் பணத்தாள் மற்றும் அட்டை இல்லாத சமூகத்தை நோக்கிய டிஜிட்டல் பணபரிவர்தனையை நோக்கமாக கொண்டு செயல்பட உள்ளது.

## விளையாட்டு செய்திகள்

**இந்தோனேசியா ஓபன் போட்டி ஜகார்த்தாவில் தொடங்கியது.**

- இந்தோனேசியா ஓபன் பேட்மிண்டன் போட்டியானது ஜகார்த்தாவில் ஜூன் 13 அன்று தொடங்கியுள்ளது. இந்தோனேஷியா ஓபன் என்பது மலேசிய ஓபன் மற்றும் இங்கிலாந்து ஓபனுக்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டிற்கான சீசனின் மூன்றாவது பேட்மிண்டன் உலக கூட்டமைப்புக்கான சூப்பர் 1000  நிகழ்வு அல்லது தொடர் ஆகும். இந்த போட்டியானது ஜூன் 13 இல் தொடங்கி ஜூன் 18இல் முடிவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- பிவி சிந்து மற்றும் எச்எஸ் பிரணாய் ஆகியோர் உள்ளிட்ட இந்திய முன்னணி வீரர்கள் ஜூன் 13 அன்று நடைபெறும் போட்டியின் தொடக்க சுற்றில் அதிரடியாக விளையாட உள்ளதாக இந்திய விளையாட்டு துறை தெரிவித்துள்ளது.

**உலக ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டி சென்னையில் தொடங்கியது.**

- உலக கோப்பை ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியானது தமிழகத்தில் உள்ள சென்னையில் ஜூன் 13 அன்று தொடங்கியுள்ளது. இந்த விளையாட்டை ஜூன் 12 அன்று "எக்ஸ்பிரஸ் அவென்யூ(EA) வணிக வளாகத்தில் தமிழக மாநில இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்துள்ளார்.

Examsdaily

- இந்த உலகக் கோப்பையானது சென்னையில் நடப்பது மகிழ்ச்சி மற்றும் திருப்தி அளிக்கிறது என்று ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டிக்கான அதிபர் ஜீனா வூல்ரிட்ஜ் தெரிவித்துள்ளார் மற்றும் இந்திய அணியானது இந்த உலக கோப்பையில் எதிரணியை சிறப்பாக எதிர்கொள்ளும் என்று இந்திய பயிற்சியாளர் கிறிஸ் வாக்கர் தெரிவித்துள்ளார்.

**முக்கிய தினம்**

**உலக இரத்த கொடையாளர் தினம் 2023**

- தானாக முன்வந்து இரத்த தானம் செய்பவர்களின் தன்னலமற்ற செயல்களுக்கு மதிப்பளிக்கவும், உலகில் இரத்த தட்டுப்பாட்டை மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் உலக இரத்த கொடையாளர் தினமானது ஜூன் 14இல் கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த தினமானது அதிகாரப்பூர்வமாக 2005 இல் உலக சுகாதார அமைப்பால் முதன்முதலில் கொண்டாடப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் கடைப்பிடிக்கப்படுகிறது. Give blood, give plasma, share life, share often என்பது இந்த ஆண்டிற்க்கான கருப்பொருளாகும்.

Examsdaily